பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 13 ஞாயிற்றுக்கிழமை 26.01.2025 கதிர் 079

# தமிழ் அரசுக்கே மக்களாணை என்ற கருத்துருவாக்கம் மாயை

## தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் அது பெரும்பான்மைபெற தமது ஆதரவு அவசியம் என்கிறார் கஜேந்திரகுமார்

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் ஆணை தமிழ் அரசுக் கட்சிக்குக் கிடைத்திருப்பதாககருத்துருவாக்கம்செய்யப்படுவது பொய் என்று தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார். நாடாளுமன்றத்தில் உள்ள 19 தமிழ் உறுப்பினர்களில் தமிழ் அரசுக் கட்சி பெரும்பான்மையைப் பெறவேண்டுமானால்அதற்குதமிழ்த்தேசிய முன்னணி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆதரவு அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இந்த மூன்று தரப்புக்களையும் ஒரு 2

## இது ரகசியம் அல்ல!

புதிய அரசமைப்புத் தொடர்பான ஆளும்தரப்பின் முயற்சி தொடங்க முன்னர் அது ஆராய ஜனநாயகத் தமிழ்த் தேசிய முன்னணியிலுள்ள ரெலோ மற்றும் தமிழ் அரசுக் கட்சிகளுடன் பேச தமிழ்த் தேசிய மக்கள்முன்னணிஎடுத்தமுயற்சிக்குத் தமிழ் அரசுக் கட்சியை நேற்றுத்தான் உத்தியோகபூர்வமாக அழைத்தார் கஜேந்திரகுமார். அதற்கான 2

## கொழும்புத் துறைமுகத்தினுள் 2742 கொள்கலன்கள் தேக்கம்

பரிசோதனைகளில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் துறைமுகத்தில் 2724 கொள்கலன்கள் தேங்கியிருக்கின்றன. அவற்றை துரிதமாக விடுவிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கொழும்புதுறைமுகத்துக்கு வருகை 10

## 4000 தொன் அரிசி துறைமுகத்திற்குள்

### இறக்குமதிக் காலம் முடிந்ததால்

தனியார் துறையால் இறக்குமதி செய்யப்பட்ட 4,000 மெட்ரிக் தொன் அரிசியை விடுவிக்க முடியாமல் சுங்கத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரிசியை இறக்குமதி செய்வதற்கு ஆளும்தரப்பு வழங்கிய காலம் முடிவடைந்ததால், இந்த 4000 8

## கட்சியின் அரசமைப்பு விவகார குழுவோடு பேசியே தீர்மானம்

### முன்னணியின் அழைப்புக்கு சிவஞானம் பதில்

கட்சியின் அரசமைப்பு விவகாரக் குழுவோடு பேசிய பின்னரே தமிழ்த் தேசியமக்கள்முன்னணியோடுபேச்சுக்குச் செல்வதா இல்லையா என்பதை முடிவு செய்ய முடியும் என்று தமிழ் அரசுக் கட்சியின்தலைவர்சிவஞானம்தெரிவித்தார். ஆளும்தரப்பின்புதியஅரசமைப்புமுயற்சிகள் தொடர்பில் நாடாளுமன்றில் இணைந்து செயற்பட வருமாறு தமிழ் அரசுக் கட்சிக்கு விடுக்கப்பட் அழைப்புக் 2

## பண மோசடிச் சட்டத்தின் கீழ்

## மகிந்தவின் 2ஆவது மகன் கைதாகி விளக்க மறியலில்



கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்ச நாளை வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். 8

## புலிகளின் மீள் எழுச்சி தொடர்பில் தகவல் இருந்தால் வெளியிடட்டும்

### மகிந்தவின் வழக்குக்கு ஆளும் தரப்பு பதில்

மீளப் பெறப்பட்ட தனது பாதுகாப்பு பிரிவை மீள வழங்குமாறு உத்தரவிடக் கோரி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு குறித்த வழக்கு நாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

மீண்டும் விடுதலைப் புலிகளின் ஒன்று கூடல் மற்றும் எழுச்சி தொடர்பான தகவல்கள் அவர் வசம் காணப்படுமாயின் அவற்றை நீதிமன்றத்தின் ஊடாக நாட்டுக்குவெளிப்படுத்துவது 8

## அரசியல் கட்டளைக்கே பொலிஸார் செயற்படுவதாக நாமல் குற்றச்சாட்டு

அரசியல் கட்டளைகளை நிறைவேற்றவே பொலிஸார் கடினமாக உழைக்கிறார்கள் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார். "அரசியல் கட்டளைகளை கடினமான முறையில் செயற்படுத்தும் பொலிஸார் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்" என்றார் அவர்.

குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட தமது சகோதரரான யோஷித்த ராஜபக்சவை நேற்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்று சந்தித்தன்

## அதானி நிறுவனத் திட்டங்கள் மீது மீளாய்வு மட்டுமே: முடிவு இல்லை

### ஆளும்தரப்பும் தெளிவுபடுத்தல்

அதானி குழுமத்தின் எந்தவொரு அபிவிருத்தி திட்டத்தையும் இரத்து செய்வதற்கு ஆளும்தரப்பு தீர்மானிக்கவில்லை. மாறான வலுசக்தி கொள்வனவு தொடர்பில் அதானி குழுமத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில்கையெழுத்திடுவதற்கு கடந்த ஆளும்தரதரப்பால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்து, அந்த இணக்கப்பாட்டைமீளாய்வுசெய்வதற்கு மாத்திரமே தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மீளாய்வுக் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் தேவையான திருத்தங்கள் 8

## ஊழல் விசாரணை கோப்புகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன

### அதன்படியே கைதுகள் என்கிறது ஆளும்தரப்பு

நாட்டில் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மூடி ஓரங்கட்டப்பட்டிருந்த ஊழல், மோசடி விசாரணைக் கோப்புக்கள் மீளத் திறக்கப்பட்டுள்ளன. அந்த வகையிலேயே சமூகத்தில் முக்கிய புள்ளிகள் எனக் கூறப்படுபவர்கள் கைது செய்யப்படுகின்றனர். மாறாக இது அரசியல் பழிவாங்கல் அல்லவென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர்அரசதகவல்திணைக்களத்தில்நேற்று 8

## நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே உள்ளாட்சி தேர்தல் பற்றி முடிவு

### தேர்தல் ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

நீதிமன்றதீர்ப்பைஅடிப்படையாகக் கொண்டே உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியும். எவ்வாறிருப்பினும் ஏப்ரலுக்குள் தேர்தலைநடத்துவதற்கானசந்தர்ப்பம் கிடைக்கும் என்று நம்புவதாக தேர்தல் ஆணைக்குழுவின் 8

## அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணமுடியாத ஆளும்தரப்பு பிராணிகளில் பழிபோடுகிறது

### விளாசுகிறார் நளின் பண்டார எம்.பி.

செல்லப்பிராணிகளுக்கு உணவுவழங்குவதால் தான் அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க குறிப்பிடுகின்றார். மக்களுக்கு அரிசியை வழங்கி அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியாத ஆளும்தரப்பு, அதன் இயலாமையைமறைப்பதற்குசெல்லப்பிராணிகளைக் குறைகூறுவது வெட்கக் கேடு. உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும்தரப்புக்கு மக்கள் சிறந்த பாடம் புகட்டுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.



அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் 8

# பழிவாங்கலை நிறுத்த பல்கலைக்கழகம் முடிவு

## மாணவர் போராட்டம் வெற்றி

*மாணவர்கள் மீதான பழிவாங்குதல்களை உடன்நிறுத்த வலியுறுத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு நாட்களாக மேற்கொண்ட உண்ணாவிரதப்போராட்டத்தின் விளைவாக பொய்யாக புனையப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்துமாணவர்கள்அனைவரும் நேற்று விடுவிக்கப்பட்டார்கள். துணைவேந்தர் தலைமையில் நேற்று நடைபெற்றபல்கலைக்கழகப்பேரவைக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.*

*மாணவர்கள்பழிவாங்கப்படுதல்கள் தொடர்பில் பல்கலைக்கழகப் பேரவை தனது கூடுதல் கவனத்தை வரும் காலத்தில் செலுத்தும் என்று உண்ணாவிரதப் போராட்டத்தை நிறைவு செய்யும் போது பேரவை உறுப்பினர்களால்தெரிவிக்கப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர்.*

*யாழ். பல்கலைக்கழகத்தினுள் இருந்த சீமெந்து இருக்கைகள் உடைக்கப்பட்டமை குறித்துக் கலைப்பீடாதிபதியிடம்கேள்விஎழுப்பிய மாணவர்கள்பழிவாங்கப்படும்விதத்தில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டது உட்படமாணவர்கள்பழிவாங்கப்பட்டு வகுப்புத் தடை விதிக்கப்பட்டதைக் கண்டித்தும் அதற்குத் தீர்வு கேட்டும் மாணவர்ஒன்றியப்பிரதிநிதிகள்இந்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.*

## இனி இது .....

உத்தியோகபூர்வ கடிதத்தை அவர் தலைவர் சிவஞானத்திடம் வழங்கினார். கூடவே முன்னணியின் செயலாளர் கஜேந்திரனும் இருந்தார்.

தமிழ்அரசுக்கட்சியிடம்கைளிக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தை முழுமையாகப் பார்க்கக் கிடைத்தது. ஆச்சரியமூட்டியது. ஏனெனில்இந்த முயற்சியில்இதுவரையில்முன்னணிகூறிவந்த விடயம்தமிழ்மக்கள்பேரவையின்அரசமைப்பு வரைவை முன்வைத்து உரையாடுவோம் என்பதுதான். அதாவது வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனை இணைத் தலைவராகக் கொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் உள்ளடக்கியிருந்த தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பினால் முன்வைக்கப்பட்ட இலங்கை அரசமைப்புக்கான வரைவை முன்வைத்து இந்தப் பேச்சுக்களை முன்னெடுக்கலாம் என்பதே முன்னணியின் திட்டமாக இருந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் முதன் முதலில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரனை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது சொந்த வீட்டில் சென்று சந்தித்துப் பேசியபோதே அவர் வெளிப்படுத்தியிருந்தார். தமிழ் மக்கள் பேரவையின் வரைவின் பிரதி ஒன்றையும் அப்போது அவர் சிறீதரனிடம் கையளித்துமிருந்தார். இதுநாள்வரையில்அந்த வரைவை முன்வைத்து ஆளும்தரப்பின் புதிய அரசமைப்புமுயற்சிகுறித்துப்பேசுவதாகத்தான் முன்னணி கூறிவந்தது. ஆனால், தமிழ் அரசுக் கட்சிக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்புக் கடிதத்தில் தமிழ் மக்கள் பேரவையின் வரைவு தொடர்பில் மூச்சுக்கூட விடவில்லை முன்னணி.

தமிழ் மக்கள் பேரவையின் வரைவு குறித்த மூச்சுக் காற்றுக்கூட அந்தக் கடித்தில் படவில்லை என்று சொன்னாலும் தகும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் என்று கஜேந்திரகுமாரும் செயலாளர் என்று கஜேந்திரனும் கையொப்பம் இட்டுள்ள அந்தக் கடிதத்தில் பின்வருமாறுதான் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் மூன்று தமிழ்க் கட்சிகளுக்கும் வழங்கிய ஏகோபித்த ஆணையின்அடிப்படையில்,தமிழ்த்தேசத்தின் அங்கீகாரம், தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமை மற்றும் தமிழ்த் தேசயத்தின் தனித்துவமானஇறைமையின்அடிப்படையில், இணைந்த வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்ற அடிப்படையில், சமஷ்டித் தீர்வை வலியுறுத்திய புதிய அரசியலமைப்புக்கான பொதுயோசனைஒன்றைமுன்வைப்பதற்கும், அரசாங்கம் உத்தேசித்துள்ள ஏக்கியராஜ்ய அரசியலமைப்பை தமிழ்த் தரப்பாக ஒன்றிணைந்து பாராளுமன்றத்தில் நிராகரிப்பதற்குமானமுயற்சியில்தங்களுடைய கட்சியின்ஒத்துழைப்புமிகஅவசியமானதாகும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, நாடாளுமன்றத்தில் உள்ள 19 தமிழ் உறுப்பினர்களில் தமிழ் அரசுக் கட்சி வைத்திருக்கும்8ஆசனங்கள்பெரும்பான்மை அல்ல, நீங்கள் பெரும்பான்மை பெறத் தேவையான மேலதிக 2 ஆசனங்கள் எம்மிடம்தான் இருக்கின்றன, எனவே இந்தப் 10 பேரும் சேரவில்லை என்றால் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் நிலைப்பாட்டை பெரும்பான்மையாக முன்வைக்க முடியாது என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்பேசுவதற்குதிங்கட்கிழமை 4 மணிக்கு வரவும், முடியாதென்றால் மூன்று கட்சிகளும் வரக்கூடிய வகையில் ஒரு திகதியைச் சொல்லவும் என்று அந்தக் கடிதத்தில் மேலும் சொல்லப்பட்டுள்ளது.

கடிதத்தில் எந்த இடத்திலும் தமிழ் மக்கள் பேரவையின் அரசமைப்பு வரைவு பற்றிக் குறிப்பிடவில்லை. தமிழ்அரசுக்கட்சியுடன்பேச வேண்டும் என்பதற்காக அதனை முன்னணி கைவிட்டுவிட்டதா என்று கஜேந்திரகுமார்தான் தெளிவுபடுத்தவேண்டும். அப்படியல்லாமல் முன்னணி தமிழ் அரசுக் கட்சியை உள்ளே இழுப்பதற்காக அந்த விடயம் இந்தக் கடிதத்தில் மறைக்கப்பட்டுள்ளதா என்பதையும் அவரே தெளிவுபடுத்தவேண்டும்.

அதுவும்போக 'ஏக்கிய இராஜ்ஜிய' அரசமைப்புவரைவைஉருவாக்கியதில்முக்கிய பங்காளியே தமிழ் அரசுக்கட்சியும் புளொட் மற்றும்ரெலோவும்தான். இப்போது அதனை நிராகரிக்கப்பேச்சுநடத்தலாம்வாருங்கள்என்று அந்தக்கட்சிகளை அழைப்பது எந்தவகையில் சரியான முயற்சி என்பதும் தெரியவில்லை. கஜேந்திரகுமாருடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ் அரசுகத் தலைவர் சிவஞானம், நல்லாட்சிக் கால அரசமைப்பு முயற்சி கைவிடப்பட்டுவிட்டது என்று தெரிவித்திருந்தார். அதன் அர்த்தம் கைவிடப்பட்ட அரசமைப்பு வரைவில் தமது கட்சி இணங்கிய விடயத்திலிருந்து அவரது கட்சி பின்வாங்கிவிடும் என்பதாக இருக்காது என்றே நான் நினைக்கின்றேன். ஏனெனில் தமிழ் அரசுக் கட்சியின் கடந்த மத்திய குழுக் கூட்டத்திலேயே இந்த விடயத்திற்குப் பதிலளிக்கப்பட்டிருந்தது. 'ஏக்கிய இராஜ்ஜிய' என்பது ஒற்றையாட்சியைக் குறிக்கும் சொல் அல்லஎன்பதுதான்தமிழ்அரசின்நிலைப்பாடு. 'ஏக்கிய இராஜ்ஜிய' என்பதன் பொருள் என்ன என்பது அரசமைப்புன் தொடக்கத்திலேயே (பிரியாம்பிள்) சிங்களம், தமிழ் என இரண்டு மொழிகளிலும்வழங்கப்பட்டுள்ளது. அதனால் அது ஒற்றையாட்சியைக் குறிக்காது என்பதே அதன் நிலைப்பாடு.

இந்த விடயத்தில் சிங்களத் தரப்புக்கள் அப்போது சூசகமாக சிங்கள மக்களை ஏமாற்றக்கூடியவகையிலானசொற்தேர்வையே மேற்கொண்டன என்பது மறுக்கமுடியாதது. இருந்தாலும் அந்தச் சொல்லாடலுக்கு தமிழ் அரசுக் கட்சி இணங்கிய பின்னர் அதனை ஏற்கமுடியாது என்று அறிவிக்க அந்தக் கடியையே வாருங்கள் என்று கேட்பது தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளை ஒரு புள்ளியில் சேர்ப்பதற்கான கஜேந்திரகுமாரின் முயற்சி என்று வெளியிலிருந்து சிலரால் பார்க்கப்படும் கோணத்திற்கு ஆப்படிக்கும் நகர்வு என்றே நான் பார்க்கின்றேன்.

மற்றையது நாடாளுமன்றத்தில் 19 தமிழ் உறுப்பினர்களில் தமிழ் அரசுக் கட்சிக்குப் பெரும்பான்மை கிடையாது என்ற எண்விளையாட்டு அர்த்தமற்றது. ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தமிழ் உறுப்பினர்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் கொள்கைகளுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர் என்பதை உலகமே அறியும். அவர்கள் தேசிய மக்கள் சக்தியின் கொள்கைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். கணக்கை அப்படிப் பார்த்தால் இப்போதும் தமிழ் அரசு, காங்கிரஸ், ரெலோ ஆகியவற்றைத் தனித் தனித் தரப்புக்களாகக் காட்டி தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆணை தனக்கு மட்டுமே இருக்கிறது என்று கூறி தேசிய மக்கள் சக்தி தான் நினைத்ததைச் செய்துவிட்டுப் போக முடியும். இந்த மூன்று தரப்புகளும் ஒன்றிணைவதால் மட்டும் ஒன்றும் செய்துவிடமுடியாது. எனவே இந்த எண் விளையாட்டு என்பது மக்களை ஏமாற்றா முயற்சிக்கும் சித்து விளையாட்டு மட்டுமே.

சமஷ்டித் தீர்வு, வடக்கு கிழக்கு தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகிய கொள்கைகளைமுன்வைத்துதமிழ்மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கட்சி தமிழ் அரசுக் கட்சியே. அதற்கு வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதுடன் 8 உறுப்பினர்களும் உள்ளனர். எனவே அது தமிழ்மக்களின்ஏகோபித்தபிரதிநிதித்துவத்தைக் கொண்டே நாடாளுமன்றத்தில் தன்னை நிலைநிறுத்தியுள்ளது. அதில்கேள்விக்குட்படுத்த ஒன்றுமில்லை.

ஆக மொத்தத்தில் தமிழ் அரசுக் கட்சிக்குத் தலையைச் சுற்றிவிட்டு அதனைப் படுகுழிக்குள் இழுத்துவிடும் வகையிலான முயற்சிகளுக்கு அதனிடமிருந்து ஆதரவு கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நாடாளுமன்றத்தில் தமிழ் தரப்புக்களை ஒரு புள்ளியில் ஒருங்கிணைப்பதற்கு உண்மையிலேயே கஜேந்திரகுமார் உளச்சுத்தியுடன் விரும்புவாராக இருந்தால், கடந்த காலங்கள் குறித்த (அவரது பாட்டன் காலத்தது முதல்) அழுக்கு மூடைகள் எல்லாவற்றையும் இறக்கி வைத்துவிட்டு திறந்த மனதுடன் எந்தவித நிபந்தனைகளும் இன்றி அவர் முயற்சிக்க வேண்டும். மற்றக் கட்சிகளும் அத்தகைய நிலையை அடையும்போது மட்டுமே இத்தகைய முயற்சிகள் வெற்றியடையமுடியும். ஒருவர் காலை ஒருவர் எப்படி வாரமுடியும் என்று சிந்தித்துக்கொண்டே வெளிப்பார்வைக்கு ஒன்றுபடுவதுபோலநடிப்பதால்எந்தப்பயனும் இருக்காது. கடந்த 15 வருடங்களாக அதனைப் பார்த்து வெறுத்துப்போய்த்தான் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள் என்பதையும் மறக்கக்கூடாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புள்ளியில் இணைப்பதற்கான பேச்சுக்கு தமிழ் அரசுக் கட்சிக்கு அழைப்பு விடுத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: நாடாளுமன்றத்தில் 19 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கின்றார்கள். அதில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை. அப்படிப்பட்ட நிலையில் தமக்குத் தான் பெரும்பான்மை இருப்பதாகவும், மக்கள் தங்களுக்கு ஆணையை வழங்கியுள்ளனர் என்றும் தோற்றப்பாட்டை உருவாக்கித் திட்டமிட்டக் கருத்துருவாக்கத்தைச் செய்கின்றனர். யதார்த்தம் அப்படியல்ல. மாறாக இம்முறை தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கட்சிகளுக்கு அமோக ஆணையைவழங்கி இருக்கின்றார்கள்.

அரசுகொண்டுவரயோசிக்கின்றஒற்றையாட்சி அரசமைப்பை நாங்கள் எதிர்ப்பதற்கு எங்களுக்கிடையில் பெரும்பான்மையைக் காட்டவேண்டும். தமிழ் அரசுக் கட்சிக்கு எட்டு ஆசனங்கள் இருக்கின்றன. 19 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையை உறுதிப்படுத்த அதனை இன்னும் இரண்டால் அதிகரித்து 10 ஆக்க வேண்டும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஒன்று, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு ஒன்று என அந்த மூன்றுதரப்புகளும்ஒரு புள்ளியில்சந்தித்தால் அந்தப் பெரும்பான்மையாகக் காட்டலாம். தமிழ்மக்களுடைய ஆணை பெற்றதரப்புகள் என்ற வகையில் எப்படி நாங்கள் மூன்று தரப்புகளும் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஒரே புள்ளியில் சந்திப்பது என்ற வகையிலேயே பேசுகின்றோம். அந்தக் கோணத்தில் மூன்று தரப்புகளும் ஒன்றாகச் சேரவேண்டும் என்ற அடிப்படையில் ஒரு யோசனை இருந்தது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த கையோடு தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் பதவி சம்பந்தமாகக் கேள்வி வந்தது. அந்தக் கட்சியால் நியமிக்கப்பட்ட வகையில் நாடாளுமன்றக் குழுத் தலைவர் என்ற வகையில்சிறீதரனோடுதொடர்புகொண்டேன். ஆனால், அந்த அமைப்பில் முடிவெடுக்கும் அதிகாரம் தலைமைப் பதவியில் உள்ள சிவஞானம் அண்ணைக்கும், செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கத்துக்கும் வழங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த இடத்தில் சிவஞானம் அண்ணன் ஒரு பேட்டியில், உத்தியோகபூர்வமாக தலைவர் அல்லது செயலாளருக்கு அழைப்பிதழ் வரவில்லை. அழைப்பு வந்தால் பரிசீலிக்கத் தயார் என்று சொல்லியிருந்தார். அதனால் நாங்கள் அவரிடம் நேரத்தைக் கேட்டு இன்று இந்த விடயத்தை அவரிடம் பகிர்ந்து இருக்கின்றோம்.

தங்கள் கட்சியிடம் விடயத்தைப் பேசி அடுத்த கட்டமாக ஒரு முடிவை அறிவிப்பதாகச் சிவஞானம்அண்ணன்சொல்லிஇருக்கின்றார். நாங்கள் அந்தச் சந்திப்பை விரைவாக மேற்கொள்கின்ற அவசியத்தை அவருக்குத் தெளிவுபடுத்தி இருக்கின்றோம். அந்த வகையிலான எதிர்பார்ப்புடன் தமிழ் அரசுக் கட்சி நல்ல முடிவை அறிவிக்கும் என்று எதிர்பார்ப்பில் இருக்கின்றோம்.

ஆளும்தரப்பினுடைய போக்கை நாடாளுமன்றத்தில் நடந்து கொள்கின்ற விதத்தைப் பார்க்கும்போது தெரிந்துகொள்ள முடிகின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை வைத்துக்கொண்டு ஒருதலைப்பட்சமாகவே நடந்து கொள்ளுகின்றார்கள்.

எண்ணிக்கையை வைத்துக் கொண்டு எதையும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கும்போதுநாடாளுமன்றசம்பிரதாயத்தை மீறி சில விடயங்களை ஆளும்தரப்பினர் செய்கின்றார்கள்.

தமிழ் அரசியல் தலைவர்கள் என்ற வகையில் மக்களை வழிநடத்தும் பொறுப்பு எங்களிடம் இருக்கின்றது. அதில் நாங்கள் தவறக்கூடாது. அந்தஅடிப்படையில்அவசரமாக எங்களிடத்திலேயே நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைக் காட்டி தவறான விடயத்தைத் தடுப்பதற்கான ஒரு புரிந்துணர்வைஏற்படுத்தவேண்டும்-என்றார்.

## கட்சியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் சிவஞானத்தை நேற்று அவரது வீடு தேடிச் சென்று சந்தித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் மற்றும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர். ஆளும்தரப்பு அறிவித்துள்ள புதிய அரசமைப்பு முயற்சி தொடர்பில் ஆராய்வதற்கான பேச்சு நாளை திங்கட்கிழமை நடத்தப்பட இருப்பதாகவும் அதில் பங்கேற்குமாறுமே அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

இந்தப் பேச்சை தமிழ் அரசுக் கட்சி மற்றும் ரெலோ ஆகியவற்றுடன் நேற்று நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான அழைப்பு தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு விடுக்கப்பட்டிருந்தது. அவர் விரும்பியவர்களைப் பேச்சுக்கு அழைத்து வரலாம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், புதிய அரசமைப்பு விவகாரம் உட்பட ஆளும்தரப்புடனான பேச்சு விடங்களைக் கையாள்வதற்காக தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் உள்ளிட்ட 7 பேர் கொண்ட குழுவைக் கட்சி நியமித்தது. இதனால் நேற்றைய சந்திப்பு நடைபெறவில்லை.

கஜேந்திரகுமாரின் பேச்சுக்கான அழைப்பு தமிழ் அரசுக் கட்சிக்குக் கிடைக்கவில்லை என்றும் அப்படியொரு அழைப்புக் கிடைத்தால் அது குறித்துக் கட்சி பரிசீலிக்கும் என்றும் கட்சித் தலைவர் சிவஞானம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று அவரைச் சந்தித்த முன்னணியின் தலைவர் மற்றும் செயலாளர் பேச்சுக்கான உத்தியோகபூர்வ எழுத்து மூல அழைப்பைக் கையளித்தனர்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# திக்கம் வடிசாலையை மீண்டும் இயக்குவதற்கு அமைச்சின் உயர் அதிகாரிகள் முட்டுக்கட்டை

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் குற்றச்சாட்டு

(சுபேசன்)

திக்கம் வடிசாலையை மீளவும் இயக்குவதற்கு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சில உயர் அதிகாரிகள் முட்டுக்கட்டையாக இருப்பதாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் விநாயகமூர்த்தி சகாதேவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவரால் பணி நீக்கம் செய்யப்பட்ட சபையின் முன்னாள் பொது முகாமையாளரை மீள அதே பதவிக்குஇணைக்கும் அமைச்சின் செயலாளருடைய செயற்பாட்டைக் கண்டித்து சபையின் பணியாளர்கள் மற்றும் தென்னை,பனை வள அபிவிருத்திச்சங்கங்களின் அங்கத்தவர்கள்கடந்தவெள்ளிக்கிழமைபோராட்டம் ஒன்றை முன்னெடுத்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

பனை அபிவிருத்திச்சபையின் பணியாளர்கள் மற்றும் சங்க அங்கத்தவர்கள் போராட்டம்ஒன்றைமுன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

திக்கம் வடிசாலையை மீளவும் இயக்கும் எமது முயற்சிக்கு அமைச்சின்உயர் அதிகாரிகள்சிலர் முட்டுக்கட்டை போடுகின்றனர்.

திக்கம் வடிசாலையை மீள இயக்குவது தொடர்பாக அமைச்சரவைப்பத்திரத்தைதயார் செய்திருக்கும் நிலையிலேயே ஊழல்குற்றச்சாட்டுசுமத்தப்பட்ட பொது முகாமையாளரை மீள பணிக்கு அமர்த்தும் முயற்சி இடம்பெற்றுள்ளது.





நாம் எமது சபையில் கடந்த காலங்களில் நடந்த ஊழல்களையும்-அதற்கு காரணமானவர்களையும் வடக்கு மாகாண ஆளுநர்,மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர், பெருந்தோட்ட அமைச்சர் மற்றும் பெருந்தோட்ட பிரதி அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தோம்.

என்னால் பணி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பொது முகாமையாளர் திக்கம் வடிசாலை இயங்க தடையாக இருந்தவர்.

அவர் சபையின் சில ஆவணங்களைமூன்றுமாதகாலமாக எமக்கு வழங்காமல் மறைத்து வைத்துள்ளார். சில ஆவணங்களை எரித்து அழித்ததார் எனவும் அவர் மீது குற்றச்சாட்டு உள்ளது. அவர் எமது பணிகளை செய்யவிடாமல் தடுத்துள்ளார்.

மேற்படி பொது முகாமையாளர் பணியாற்றிய காலத்தில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாக இலஞ்ச ஆணைக் குழுவில் இருந்து முறைப்பாடும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ்வாறு கடந்த காலத்தில் ஊழல்கள் செய்தவர்கள் தமது ஊழல்களை வெளிப்படுத்திய பணியாளர்கள் மீது நஷ்டஈடு கோரி வழக்கு தொடுத்துள்ளனர். உண்மையில் ஊழல் செய்தவர்களே பனை-தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்.

ஊழல்வாதிகளைக் காப்பாற்ற உயர் அதிகாரிகள் அக்கறை காட்டுகின்றனர்.

நாம் ஊழல் செய்தவர்கள் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு அமைச்சின் உயர் அதிகாரிகளால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. ஆனால் நாம் திக்கம் வடிசாலையை மீள இயக்க நடவடிக்கை எடுப்பது குற்றம் என்கின்றனர்.

இலஞ்சம் கேட்ட அதிகாரிகள் மீது தென்னை-பனை வள கூட்டுறவுச் சங்கங்கள் கொடுத்த முறைப்பாட்டிற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

ஆனால் தவறு செய்யாமல் தவறை தட்டிக் கேட்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பனை அபிவிருத்திச்சபையை சுரண்டி அதில் சுகபோகம் அனுபவித்தவர்களே தற்போதும் அமைச்சினையும்-அரசாங்கத்தையும் தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர். அதற்கு ஒருபோதும் இடம் கொடுக்க முடியாது. பனை அபிவிருத்திச்சபை பணியாளர்கள் மற்றும் சங்கங்களால்முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டம் அரசாங்கத்திற்கு எதிரானது அல்ல.

ஊழல்வாதிகளை அரசாங்கம் உடனடியாகத் தண்டிக்கவேண்டும்என்றகோரிக்கையைமுன்வைத்தே இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. - என மேலும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

# உளுந்து செய்கை முற்றாக அழிவு வவுனியா விவசாயிகள் கவலை

வவுனியாவில் கடந்த சில நாள்களாக பெய்த கனமழை காரணமாக உளுந்துச் செய்கை முற்றாக அழிவடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தெற்கு ஆசியாவை பூர்வீகமாக கொண்டது உளுந்து செய்கை. இலங்கையில் விளைவிக்கப்படும் தானியங்களில் உளுந்தும் முக்கியமானது. உளுந்து செய்கையானது வடக்கில் வவுனியாவில் அதிகமாக செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. உளுந்துக்கான கேள்வியானது அதிகமாக இருக்கின்றது. இந்நிலையில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடன்பட்டும், நகைகளை அடைவு வைத்தும் செட்டிகுளம், ஓமந்தை, பாவற்குளம், சூடுவெந்தபுலவு, நெடுங்கேணி, சிப்பிக்குளம், பறநாட்டாங்கல் என பல பகுதிகளிலும் உளுந்து செய்கையில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

2024-2025 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பெரும் போகத்தில் 5650 ஹெக்டேயர் அளவில் வவுனியாவில் உளுந்து செய்கை பண்ணப்பட்டது. இருப்பினும் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளத்தாலும், நோய் தாக்கத்தாலும் இம்முறை உளுந்து செய்கையாளர்கள் பலர் பாதிப்படைந்துள்ளதுடன் பயிற் செய்கைக்கு செலவு செய்த பணத்தைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

உளுந்து அறுவடைக்கு தயாரக இருந்த வேளை வவுனியாவில் தொடர்ச்சியாக கனமழை பெய்தமையால் உளுந்து செடிகளிலேயே முளைத்து விட்டது. இதனால் அதனை அறுவடை செய்ய முடியாத நிலையில் தமது செலவீனத்தைக் கூட மீளப் பெற முடியாதவாறு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். உளுந்து 100 வீதம் அழிவடைந்துள்ள நிலையில் தமக்கான நஸ்ட ஈட்டை அரசாங்கம் வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## பயனுள்ள பொறிமுறை வேண்டும்

இலங்கைபலதசாப்தங்களாகசட்டங்களைமுறையாகஅமல்படுத்துவதில் தோல்வியடைந்துள்ளது. இங்கே தண்டனை விலக்களிப்பு ஒரு கலாசாரமாக உருவாகி வளர்ந்திருக்கிறது. தேசபக்தி, போர் என்பவற்றின் போர்வையில் அது நியாயமானது என்ற மனநிலை மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்ற வைக்கப்பட்டுள்ளது. இதனால், சட்டமின்மை, குற்றம் மற்றும் ஊழல் ஆகியவை பேயாட்சி செய்து வருகின்றன, மேலும் அவை தொடர்ந்து ஒரு பிரச்சினையாகவே உள்ளன.

சட்ட அமலாக்க நிறுவனங்களில் நேர்மை மற்றும் தொழில்முறை இல்லாமை பிரச்சினையின் ஒரு பகுதி. இன்று, பலருக்கு காவல்துறை மீது மரியாதையே இல்லை. அல்லது அது மிகக் குறைவாகவே உள்ளது. சட்ட அமலாக்க அதிகாரிகள் சோம்பேறிகளாகவோ அல்லது பொதுமக்களின் கவலைகளை தீவிரமாக எடுத்துக்கொள்ளாதவர்களாகவோதான் இருக்கிறார்கள் என்பது மக்களின் நம்பிக்கை. காவல் நிலையங்களில் செய்யப்படும் முறைப்பாடுகளின் மீது அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்பது ஒவ்வொருவரினதுமே நம்பிக்கையாக இருக்கிறது.

இலங்கை காவல் துறை பயனற்றது என்று பரவலாக நம்பப்படுகிறது, அது ஊழல்மோசடிகளின் உறைவிடம் என்றும் பெரும்பான்மையானவர்கள் நம்புகின்றார்கள். அரசியல்மயமாக்கப்பட்ட காவல்துறையினர் தங்கள் விருப்பப்படி சட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பது பொதுமக்களின் பொதுவான நம்பிக்கை. அதன் மிக அண்மைய விளைவே கொழும்பில் காவல் நிலையம் ஒன்றில் தமிழ் பெண் ஒருவரின் இறப்புத் தொடர்பில் எழுந்திருக்கக்கூடிய கொந்தளிப்பு நிலை. காவலில் இருந்த பெண் தற்கொலை செய்துகொண்டார் என்பதை நம்புவதற்குப் பதில் அவர் காவலர்களால் கொலை செய்யப்பட்டிருப்பார் அல்லது அவர்களது துன்புறுத்தல் தாங்காதுதான் தற்கொலை செய்திருப்பார் என்றே பெரும்பான்மையானவர்கள் நம்புகின்றார்கள்.

கண்டி, தவுலகல, ஹபுகஹயட தென்ன பகுதியில் 18 வயது பள்ளி மாணவி கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, காவல்துறை உயர் அதிகாரிகள் ஒரு தலைமை ஆய்வாளரை இடைநீக்கம் செய்தனர் மற்றும் இரண்டு அதிகாரிகளை இடமாற்றம் செய்தனர். தகவல்களின்படி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமை தவறியிருந்தனர் என்று எழுந்த குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் நடந்த நேரத்தில், பணிநீக்கம் செய்யப்பட்ட தலைமை காவல்துறை ஆய்வாளர் தவுலகல காவல் நிலையத்தின் செயல் அதிகாரியாக (நுணூளீ) பணியாற்றி வந்தார். கூடுதலாக, அதே நிலையத்தில் பணியாற்றும் ஒரு பெண் தலைமை காவல்துறை ஆய்வாளரும் ஒரு துணை ஆய்வாளரும் (ரீணூ) வேறு காவல் நிலையங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான மூத்த டிஐஜி லலித் பத்திநாயக்க இந்த ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் வடக்கு கிழக்கில் ஒவ்வொரு மாதமும் இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் அவற்றின் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. தமிழ் பேசும் மக்களின் முறைப்பாடுகளை உதாசீனம் செய்தார்கள் என்பதற்காகவோ அல்லது கடமை தவறினார்கள் என்பதற்காகவோ எந்தக் காவலரும் வடக்கு கிழக்கில் ஒழுக்காற்று நடவடிக்கைக்கோ தண்டனைக்கோ உள்ளாக்கப்பட்டதில்லை. இன்னும் சொல்லப்போனால் அத்தகைய நிலை குறித்து உயரதிகாரிகளிடம் முறையிட்டவர்கள் பழிவாங்கப்பட்ட சம்பங்களே அதிகமுள்ளன.

கடந்த ஆண்டு (2024) தேசிய காவல் ஆணையம் (ஹிஊணளீ) அதன் முக்கிய புகார்களைப் பெறும் வழிகள் மூலம் மொத்தம் 2,860 பொதுப் புகார்களைப் பெற்றுள்ளது, அவற்றில் பெரும்பாலானவை காவல் அதிகாரிகளின் செயலற்ற தன்மை தொடர்பானவை. அதிகார துஷ்பிரயோகம், விசாரணைகளில் பாரபட்சம், போலிக் குற்றச்சாட்டுகளை உருவாக்குதல் மற்றும் லஞ்சம் மற்றும் ஊழல் ஆகியவை பிற குற்றச்சாட்டுகளாகும். 2023 ஆம் ஆண்டிற்கான அவர்களுக்கு வந்த புகார்களில், கிட்டத்தட்ட 30 வீதமானவை காவல்துறையின் செயலற்ற தன்மையுடன் தொடர்புடையவை. அதிகார துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகள் அதிகம். இது மொத்த புகார்களில் கிட்டத்தட்ட 23%, அதே நேரத்தில் விசாரணைகளின்போது பாரபட்சம் மற்றும் குற்றச்சாட்டுகளை உருவாக்குதல் ஆகியவை தோராயமாக 23.7%. காவல்துறையினரால் லஞ்சம் மற்றும் ஊழல் பெறப்படுவது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தோராயமாக 4.5%. அதே நேரத்தில் 0.8% சித்திரவதை தொடர்பானவை மற்றும் 0.38% பெண்கள் துன்புறுத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவை.

பல்வேறு தவறான நடத்தைகளில் ஈடுபடும் காவல்துறை அதிகாரிகள் மீது தேவைப்பட்டால் ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தற்போதைய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மற்றும் பொதுப் பாதுகாப்பு துணை அமைச்சர் சுனில் வட்டகல ஆகியோர் உறுதியளித்துள்ளனர். காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்க அரசியல் விருப்பம் இருப்பது முக்கியம் என்றாலும் அதற்கென முறையான ஒரு அமைப்பு இல்லாமல் அது சாத்தியப்படாது.

நேர்மையான அதிகாரிகளைப் பதவி உயர்த்துவதற்கும் அவர்களுக்கு உரிய மரியாதைகளை வழங்குவதற்கும் தவறிழைப்பவர்கள் தண்டிக்கப்படுவதற்குமான பொறிமுறை மிக அவசியம். அவை ஒரு காவல்துறை அதிகாரியை அவர் அறியாமலேயே கண்காணிக்கும் சூழ்நிலையை உருவாக்கும், அது இன்றி வெறும் அரசியல் முழக்கங்களால் பயன் ஏற்படாது.



# புட்டின் – ட்ரம்ப் சந்திப்பு சாத்தியமா ? நேட்டோவுடன் முறுகும் அமெ. அதிபர்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ரஷ்ய ஜனாதிபதி புட்டின், டொனால்ட் டிரம்ப் உட்பட சர்வதேசத் தலைவர்களுடன் ஈடுபடுவதற்கான தனது திறந்த தன்மையை தொடர்ந்து கூறியுள்ளார் என்று கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் அண்மையில் தெரிவித்துள்ளார்.

மாஸ்கோ பேச்சுத் திறனை பலவீனப்படுத்தும் அபாயம் அதிகம் உள்ளது என்றும், சமாதானத்தை நிலைநிறுத்த புட்டினை நேரடியாகத் தொடர்பு கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும் டிரம்ப் கூறியுள்ளார். ஆயினும் சந்திப்புக்கான திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

### நேட்டோ உறவில் முறுகல் :

நேட்டோ உறுப்பு நாடுகள் தங்கள் பாதுகாப்பு செலவினங்களை அதிகரிக்க வேண்டும் என்று டிரம்ப் நீண்ட காலமாகக் கூறி வருகிறார்.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் உட்பட 32 நாடுகளை உள்ளடக்கிய வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ) டிரம்பின் பொருளாதர வெறுப்புக்குரிய விஷயங்களில் ஒன்றாகும்.

அதிபராக தனது முதல் பதவிக் காலத்தின்போது, மற்ற உறுப்பு நாடுகள் 'தங்களது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 2 சதவீதத்தை பாதுகாப்புக்காக செலவிட வேண்டும்' என்ற ஒப்புக் கொள்ளப்பட்ட இலக்கை அடையத் தவறினால், நேட்டோவிலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்வதாக அவர் அப்போது அச்சுறுத்தினார்.

மேலும் தனது பங்கை செலுத்தாத ஒரு உறுப்பு நாடு தாக்கப்பட்டால், அமெரிக்கா அதை பாதுகாக்காது என்றும் டிரம்ப் கூறியது பலத்த சர்ச்சையை ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுத்தியது.

இந்நிலையில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் பதவியேற்க முன்னர், ஜனவரியின் 2025 தொடக்கத்தில், நேட்டோவின் ஐரோப்பிய உறுப்பு நாடுகள் தங்கள் தேசிய வருமானத்தில் 5% (முந்தைய இலக்கை விட இரண்டு மடங்கிற்கும் அதிகமாக) இதற்காக செலவழிக்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார்.


நேட்டோவின் நோக்கம் மற்றும் பணியை 'அடிப்படையில் இருந்தே மறு மதிப்பீடு செய்வது' தான் டிரம்பின் குறிக்கோள் என்று அவரது அரசியல் பிரசார வலைத்தளம் விவரிக்கிறது.

ஆயினும் நேட்டோ கூட்டணியில் இருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்ள வாய்ப்பு உள்ளதா என்பது குறித்து கருத்து வேறுபாடுகள் அவரது கட்சிக்கு உள்ளயே நிலவுகிறது.

ஆனால் நேட்டோவில் இருந்து வெளியேறாமல் கூட இந்தக் கூட்டணியை பலவீனப்படுத்த அவருக்கு குறிப்பாக ஐரோப்பாவில் உள்ள அமெரிக்க துருப்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் அதனை அவரால் சாதிக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

### டிரம்ப் ரஷ்ய ஆதரவு போக்கு:

ரஷ்யாவின் வாசலில் யாரோ நிற்கிறார்கள். அதைப் பற்றிய அவர்களின் உணர்வை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது எனும் ரஷ்யாவிக்கு ஆதரவான டொனால்ட் டிரம்ப் கருத்துகள் உக்ரைனை கொதிப்படைய வைத்துள்ளது.



போர் 2022இல் தொடங்குவதற்கு முன்பு, ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கலாம். உக்ரைனை நேட்டோவில் சேர்க்காமல் விலக்கி வைக்க டிரம்ப் ஒப்புக் கொண்டிருப்பார். மேலும் ஜோ பைடன் விரும்பத்தகாத பிற சலுகைகளையும் ரஷ்யாவிற்கு வழங்கியிருப்பார் என்றும் கூறப்படுகிறது.

அமெரிக்க அதிபராக மீண்டும் பதவியேற்ற டொனால்ட் டிரம்ப் ரஷ்யா-உக்ரைன் போரை நூறு நாட்களில் முடிவுக்குக் கொண்டு வரும் திட்டம் இருப்பதாக அறிவித்துள்ளார்.

இன்னமும் இத்திட்டம் பற்றிய அதிகாரப்பூர்வ முழுமையான விவரங்கள் வெளியிடப்படவில்லை. ஆனால் டொனால்ட் டிரம்பின் குழு ஏப்ரல் மாதத்திற்குள் மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குடியரசுக் கட்சித் தலைவரும் அதிபருமான டொனால்ட் டிரம்ப் மாஸ்கோவிற்கு வழங்கிய நிபந்தனைகள் பற்றியும் தெளிவாக விளக்கப்படவில்லை.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியான டொனால்ட் டிரம்ப் கடந்த திங்களன்று ஜனவரி 20இல் பதவியேற்ற நாளில் பல நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திட்டுள்ளார்.

உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டு வருவது அவரது முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகும். உக்ரைனுக்கான டிரம்பின் சிறப்புத் தூதர் ஓய்வுபெற்ற அமெரிக்க ஜெனரல் கீத் கெல்லாக் இது குறித்து கூறுகையில் 'இராஜாங்க தொழில்முறை மட்டத்தில் ஒரு இலக்கை நிர்ணயிக்க விரும்புகிறேம், அதை நூறு நாட்களில் நிர்ணயிப்போம் என்றும் கூறினார்.

அடுத்த மாதம் இப்போரின் மூன்றாவது ஆண்டு



இன்னும் வழிகள் உள்ளன என்று இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# புட்டின்....

4ம் பக்கத் தொடர்ச்சி...........

நிறைவு அடைய உள்ளது. ஆனால் டிரம்பின் உக்ரைன் நூறு நாள் போர் நிறுத்த திட்டம் எவ்வளவு நம்பிக்கையுடன் தோன்றினாலும், நூறு நாட்கள் என்பது மிகவும் கடினமான ஒன்றாகும் என கூறப்படுகிறது.

### உக்ரேன் நிதி நிறுத்தம்:

உக்ரேனுக்கான நிதி உதவியை நிறுத்தப் போவதாக டிரம்ப் அடிக்கடி மிரட்டல் விடுத்திருந்தார். அவருடைய தேர்தல் பிரசாரத்தின் போது, ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையிலான போரை 'ஒரே நாளில்' முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்று டிரம்ப் பலமுறை கூறினார். ஆனால், அதுகுறித்த கூடுதல் விவரங்களை அவர் இதுவரை அளிக்கவில்லை.

2022ஆம் ஆண்டில் ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பு தொடங்கியதிலிருந்து, உக்ரேனுக்கு வழங்கப்பட்ட பில்லியன்கணக்கான டாலர்மதிப்பிலான அமெரிக்க ராணுவ உதவி குறித்து டிரம்ப் நீண்டகாலமாக விமர்சித்து வருகிறார்.

இதனால், போரை முடிவுக்கு கொண்டு வர, ரஷ்யாவுடன் சமரசம் செய்யுமாறு உக்ரேனை டிரம்ப் நிர்பந்திப்பார் என்ற அச்சம் உக்ரேன் ஆதரவாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்நிலையில் உக்ரேன் மற்றும் ரஷ்யாவுக்கான டிரம்பின் சிறப்பு தூதராக நியமிக்கப்பட கீத் கெல்லாக் என்பவர் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

ஜனவரியின் தொடக்கத்தில், ஊடகங்களிடம் பேசிய கெல்லாக், '100 நாட்களுக்குள் இந்த விவகாரத்தில் ஒரு தீர்வை எட்டுவதை நோக்கமாகக் கொண்டிருப்பதாகக்' கூறினார்.

மேலும் ரஷ்யாவுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க உக்ரேன் ஒப்புக் கொண்டால் மட்டுமே, அந்நாடு அமெரிக்காவின் உதவியைப் பெற முடியும் என்று கெல்லாக் கடந்த ஏப்ரல் மாதம் ஒரு ஆய்வறிக்கையில் முன்மொழிந்தார்.



# டெங்கு விழிப்புணர்வு ஆவணப்படம் யாழ். இந்துக் கல்லூரியில் வெளியீடு

யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் அனுசரணையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒளிப்படக்கலைக் கழகத்தின் தயாரிப்பு மற்றும் ஒளிப்படமாக்கலில் உருவான டெங்கு விழிப்புணர்வு தொடர்பான ஆவணக் குறும் படம் கடந்த 20ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் இந்த நிகழ்வு நடைபெற்றது.



யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும் சிறப்பு விருந்தினர்களாக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாண சுகாதார பணிப்பாளர் மருத்துவர் சமன் தர்மஸ்ரீ பத்திரன, யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ரம்யா சந்திரசேகரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன், யாழ். மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன், பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் படத் தயாரிப்பு மற்றும் படப்பிடிப்பில் ஈடுபட்ட இந்துக் கல்லூரி ஒளிப்பட கழக மாணவர்களுக்கு பிரதம விருந்தினர் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் இந்துக் கல்லூரி ஒளிப்படக் கழகத்துக்கான கேடயமும் பிரதம விருந்தினரால் வழங்கி வைக்கப்பட்டது. இந்த ஆவணப்படத்தில் பங்குபற்றிய சுகாதாரத்துறைபணியாளர்கள் ஏனைய விருந்தினர்களால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த டெங்கு ஆவண குறும்படத்துக்காக முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் த.தவரூபன் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







# கல்முனை பற்றிமாவில் 64 பேர் சித்தி கல்முனை வலயத்தில் முதலாமிடம்

(சகா தேவராஜா)

கிழக்கில் பூகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின்படி 64 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளார்கள்.

கல்லூரி அதிபர் அருட்சகோ. றெஜினோல்ட் கூறுகையில் -

எமது பாடசாலையில் 216 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

அவர்களுள் 64 மாணவர்கள் வெட்டுப் புள்ளியான 139 இற்கு மேல் பெற்றுள்ளனர்.

ஆகக்கூடிய புள்ளியான 180 புள்ளிகளை மாணவி கனகராசா கேஷாரஹர்ஷினி பெற்று சாதனை படைத்துள்ளார்.

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் அதிபர் அருட் சகோதரர் றெஜினோல்ட் கூறுகையில் -

கல்முனை வலயத்தில் அதிகூடிய சித்திகள் மற்றும் புள்ளியையும் எமது பாடசாலை மாணவர்கள் பெற்றுத் தந்துள்ளார்கள். மாணவர்கள் கற்பித்த ஆசிரியர்கள் பெற்றோர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். - என்றார்.

# கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலையில் இரு மாணவர்கள் புலமைப் பரிசிலில் சித்தி

(சியாஜ்)

இம்முறை இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலை மாணவர்களான மொஹமட் மில்ஹான் மொஹமட் மிஹ்ரான் 157 புள்ளிகளையும் மொஹமட் நசீர் மொஹமட் நப்லான் 138 புள்ளிகளையும் பெற்று இருவர் சித்தியடைந்துள்ளனர்.

பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய 26 மாணவர்களில் இருவர் வெட்டுபுள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதுடன் 61 வீதமாணவர்கள் 70 புள்ளிகளுக்கு பெற்றுள்ளனர். இம் மாணவர்களுக்கும் கல்வி புகட்டிய ஆசிரியர்களான எம் பீ.றைஹானா மற்றும் என்.கே நசீரா ஆகியோருக்கும் பாடசாலை நிர்வாக் குழு மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு சார்பாக தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் அதிபர் எம்.எம்.எம். நவ்ப் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# சிறுபான்மை சமூகங்களுக்காக குரல்கொடுத்த பெருந்தலைவர் மர்ஹூம் டாக்டர் இல்யாஸ்

## நாடாளுமன்றில் ஹிஸ்புல்லாஹ் எம்பி தெரிவிப்பு

*(சினீஸ் கான்)*

இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் முஸ்லிம் அரசியலை நோக்குகின்றபோது முக்கியமானதொருபோராளியாகயிருந்ததுடன் தன்னுடைய சிறுவயது முதல் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கும், சர்வதேச ரீதியிலாக முஸ்லிம் சமூகம் எங்கு பாதிக்கப்பட்டாலும் அந்த மக்களுக்காக குரல்கொடுப்பவரும், இன,மத வேறுபாடுகளுக்கப்பால் சிறுபான்மை சமூகம் பாதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் பெருந்தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஐ.எம். இல்யால் அவர்களை நாம் பார்க்கிறோம் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான , ருக்மன் சேனாநாயக்க, டாக்டர்.ஐ.எம்.இல்யாஸ், ரெஜினால்ட் பெரேரா, சிறினால் டி மெல் ஆகியோர் தொடர்பில் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அனுதாபப் பிரேரணைகள் மீது கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் -

1994 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டு 2000 ஆம் ஆண்டு வரை மிக முக்கியமான காலகட்டத்திலே மறைந்த பெருந்தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களோடும் என்னோடும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். வடக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் தமிழீழ விடுதலை புலிகளால் விரட்டியடிக்கப்பட்டு இருப்பதற்கு இடமின்றி உண்ணுவதற்கு உணவின்றி, ஆடையின்றி அந்த மக்கள் வந்த போது அந்த மக்களை புத்தளத்தில் மிக அன்போடு வரவேற்று அதற்கு தலைமைதாங்கி புத்தளத்தில் இருந்த மார்க்கத்தலைவர்கள், சமூகத்தலைவர், புத்திஜீவிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்து அந்த மக்களுக்கு தேவையான அனைத்துவசதிகளையும் செய்து கொடுப்பதற்கு முன்னின்று உழைத்ததுடன் அந்த மக்களை மீள குடியேற்றுவதற்கு, காணிகளைபெற்றுக் கொடுப்பதற்கு, வீட்டு வசதிகளை செய்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் இரவு பகலாக பாடுபட்டதை நாம் அறிவோம்.



அதேபோன்று காத்தான்குடி, ஏறாவூர் பிரதேசங்களில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டபோதெல்லாம் எங்களிடம் வந்து எங்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்லுகின்ற நல்ல பண்பு கொண்ட மனிதராக காணப்பட்டார். அவர் தற்போது எங்களை விட்டு பிரிந்திருக்கிறார் அவருக்காக பிராத்திக்கிறோம். இறைவன் அவரது நற்பணிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவரது உரையில் தெரிவித்தார்.



# இரு குழுக்களுக்கு இடையில் கைகலப்பு எட்டுப் பேர் மருத்துவமனையில் சேர்ப்பு

(பர்ஸான்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பில் இதுவரை எட்டுப் பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை செம்மண்ணோடைப் பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு கைகலப் பாகியுள்ளது.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த இரு குழுக்களையும் சேர்ந்த எட்டுப்பேர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் அதில், நான்கு பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

இரு குழுக்களிலும் சுமார் முப்பதுக்கும் மேற்பட்டோர் இந்த கைகலப்பு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தசம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலயம் புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/கமு/ லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயம் இம்முறை 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் வரலாற்று சாதனையை படைத்துள்ளது.

இந்த பாடசாலையில் இருந்து பரீட்சைக்கு தோற்றிய மொத்தம் 57 மாணவர்களில் பத்து மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளனர். 85.8 என்ற சராசரி அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ள இந்த பாடசாலையின் அடைவுக்கு அதிபர், ஆசிரியர்களின் அயராத உழைப்பே காரணம் என பெற்றோர்கள் நன்றி பாராட்டுகிறார்கள்.

சுனாமிக்கு பின்னர் கரையோர பிரதேச மாணவர்களின் கல்வி நன்மையை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட இந்த பாடசாலை போதியளவு அடிப்படை வசதிகளே இல்லாத நிலையில் இயங்கி வருவதுடன் பின்தங்கிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உத்வேகம் அளித்து வருகிறது.

கல்விசார் மற்றும் கல்விசாரா போட்டிகளில் கூட மிளிரும் இந்த பாடசாலையின் மேம்பாட்டில் முதன்மை வகிக்கும் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.சம்சுதீன், பிரதியதிபர், உதவியதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர், சாதனை மாணவர்கள் எல்லோருக்கும் பொதுமக்கள் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

# சுற்றுலாத் துறை அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்

(ஹஸ்பர்)

சுற்றுலாத் துறையை எதிர்காலத்தில் மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டத்தை நனவாக்கும் நோக்கில், வெள்ளிக்கிழமை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன தலைமையில் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய பல தரப்பினரின் பங்கேற்புடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிழக்குமாகாண குறித்த கலந்துரையாடலில் ஆளுநர் செயலக செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் சுற்றுலா தொடர்பான சங்கங்களின் பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு அரச துறை மூலம் தேவையான உட் கட்டமைப்பு வசதிகளை உடனடியாக வழங்குவதுஎன்றும், சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினரால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து தெரிவிக்கப்பட்டு, அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகளை எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# யானை தாக்குதலுக்கு இலக்கான நபர் வைத்தியசாலையில் சேர்ப்பு

## வவுனியாவில் சம்பவம்: இருவர் கைது

(அபு அலா, முபீன்)

திருகோணமலை - கம்பகொட்ட பகுதியில் யானை தாக்கியதில் நபரொருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு படுகாயமடைந்தவர் திருகோணமலை, எத்தாபெந்திவெள- பகுதியைச் சேர்ந்த சின்தக விமலசேன (42வயது) எனவும் தெரியவந்துள்ளது.

குறித்து சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது -

வயல் காவலுக்கு சென்ற வேளையில் யானை வயலுக்குள் நின்ற வேளை யானையை விரட்ட முற்பட்டபோது யானை துரத்தி தாக்கியதாகவும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து படுகாயமடைந்த நிலையில் மஹதிவுல்வெள பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தற்போது காட்டுயானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# பெருக்குவற்றான் அல் மின்ஹாஜ் பாடசாலையில் ஆறு பேர் சித்தி

(சியாஜ்)

தற்போது வெளியாகியுள்ள தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புத்தளம் - தெற்கு கோட்டத்திற்கு உட்பட்ட புத்தளம் பெருக்குவற்றான் அல் மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மாணவர்களான ஜே.ஜெஸா அபா - 151 புள்ளிகள், ஏ.ஆயிஷா 151 புள்ளிகள், ஐ. நுபைத் 146 புள்ளிகள், என்.ஆயிஷா 146 புள்ளிகள் , ஆர்.நஹா 144 புள்ளிகள், ஆர்.அப்ரின் 139 புள்ளிகள் என மாவட்ட வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

மேலும் பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 100 வீத சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இம் மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு அச்சாணியாக திகழ்ந்த ஆசிரியர் திருமதி எப்.பீ.எம் டொரீன் மங்களிகா அதிபர் எஸ் எச் எம் அன்சார் பாடசாலை நிர்வாகம், அபிவிருத்திக் குழு, பழைய மாணவர்கள் சார்பாக தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் தெரிவித்துள்ளனர்.






## புலிகளின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று ஆளும்தரப்புத் தெரிவித்துள்ளது.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவை பேச்சாளர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பினை அதிகரிக்கக் கோரி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் வழக்கு நாட்டில் சிறந்தவொரு வழக்காக அமையும்.

நாட்டின் பாதுகாப்புச் சபைகூட அறியாத தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் எழுச்சி குறித்த தகவல்கள் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட குழுவினரிடம் காணப்பட்டால் அவற்றை நீதிமன்றத்தின் ஊடாக நாட்டுக்கு வெளிப்படுத்துவதே சிறந்ததாகும். அவை தேசிய பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமையும்.

மகிந்தவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட படையினரை அகற்றும் தீர்மானம் புலனாய்வு மற்றும் பாதுகாப்பு அறிக்கைகளின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு சபைக்கு அப்பாற்பட்ட தகவல்கள் அவர்களிடம் காணப்பட்டால் அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும். நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கமையவே அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 30,534 சதுர அடி மாளிகையிலேயே வசிக்கின்றார். ஒரு ஏக்கரும் 13 பேர்ச் கொண்ட இடமாகும். அது அரச மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டுக்கமைய 3,357 மில்லியன் ரூபா பெறுமதியுடையதாகும். விஜேராமமாவத்தையிலுள்ள அந்த இல்லம் 46 இலட்சம் மாதாந்த வாடகை பெறக்கூடியது என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் இந்த இல்லத்தின் மீள்புனரமைப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்காக மாத்திரம் 472.5 மில்லியன் ரூபா அரச நிதி செலவிடப்பட்டுள்ளது.

2021இல் 252 மில்லியன் ரூபாவும், 2022இல் 181.5 மில்லியன் ரூபாவும், 2023இல் 38.7 மில்லியன் ரூபாவும் இவ்வாறு செலவிடப்பட்டுள்ளது. இந்த வீட்டில் மொத்த மதிப்பீட்டு பெறுமதியில் இந்த செலவும் சேர்க்கப்படவேண்டும்.

இலங்கை பெரும் நெருக்கடியைச் சந்தித்துக்கொண்டிருக்கும் நிலையில் தொடர்ந்தும் இவ்வாறான அநாவசிய பெரும் செலவை ஆளும்தரப்பால் ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்கள் அரசமைப்பில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இல்லம் வழங்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளதாக மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

நாமறிந்த அரசமைப்பில் அவ்வாறானதொரு விடயம் குறிப்பிடப்படவில்லை. சட்டத்தரணி நாமல் ராஜபக்ச உள்ளிட்டவர்களிடம் அரசமைப்பில் எந்த உறுப்புரையில் அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கேட்க விரும்புகின்றோம் என்றார்.

## அதானி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையிலேயே அதானி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அதானி குழுமத்தினால் மன்னார் மற்றும் பூநகரி பிரதேசங்களில் முன்னெடுக்கப்படவிருந்த காற்றாலை மின்உற்பத்தி திட்டங்கள் ஆளும்தரப்பால் இரத்து செய்யப்பட்டதாக வெள்ளிக்கிழமை வெளியான செய்திகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன. இது தொடர்பில் அதானி நிறுவனமும் தெளிவுபடுத்தியிருந்தது.

மன்னார் மற்றும் பூநகரி பிரதேசங்களில் முன்னெடுக்கப்படவிருந்த காற்றாலை மின்னுற்பத்திதிட்டங்களைஇரத்துசெய்வதற்கு ஆளும்தரப்பு தீர்மானிக்கவில்லை. இது தொடர்பில் இதுவரையில் நீதிமன்றத்தில் 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மே மாதத்தில் இவ்வழக்கு விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

அதேவேளை கடந்த ஆளும்தரப்பால் இந்த திட்டம் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீளாய்வு செய்வதற்கு எமது ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது. அதற்கமைய மீளாய்வு குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை மாத்திரமே ஆளும்தரப்பு எடுத்துள்ளது. அதனைவிடுத்து வேறு எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. மீளாய்வுக்குழு அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. மீளாய்வின் பின்னர் அந்த அறிக்கைக்கமைய எவ்வாறான திருத்தங்களை மேற்கொள்வது என்பது குறித்து பின்னர் தீர்மானிக்கப்படும்.

வலுசக்தி கொள்வனவு தொடர்பில் அதானி குழுமத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையெழுத்திடுவதற்கு கடந்த ஆளும்தரப்பின் அமைச்சரவை அங்கீகாரமளித்திருந்தது. குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தை இரத்து செய்து, கொள்வனவு விலைகள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டுள்ளன.

காரணம் கடந்த ஆளும்தரப்பால் இணக்கப்பாடு தெரிவித்திருந்த விலைகளுடன் எம்மால் இணங்க முடியாது. எனவே தான் அதனை மீளாய்வு செய்து திருத்தங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது என்றார்.

## 4000 தொன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொன் அரிசியும் விடுவிக்கப்படாமல் இருப்பதாக சுங்க ஊடகப் பேச்சாளரும் மேலதிக சுங்க பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக்கொட தெரிவித்தார்.

நாட்டில் அரிசி பற்றாக்குறைக்குத் தீர்வாக அரிசியை இறக்குமதி செய்ய அரச மற்றும் தனியார் துறைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது, அந்தக் காலக்கெடு ஜனவரி 10 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

அந்தக் காலகட்டத்தில், தனியார் துறையும் ஆளும்தரப்பும் 167,000 மெட்ரிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், இறக்குமதிக்கான காலம் நிறைவடைந்த பின்னர் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த 8,000 மெட்ரிக் தொன் அரிசி துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ளதாக சீவலி அருகொட குறிப்பிட்டார்.

அதில் ஆளும்தரப்புக்குச் சொந்தமான 4,000 மெட்ரிக் தொன் அரிசி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், தனியார் துறையால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கையிருப்பை விடுவிப்பது குறித்து அதிகாரிகளுடன் தற்போது கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் சுங்க ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## நீதிமன்றத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

2023ஆம் ஆண்டு கோரப்பட்ட வேட்புமனுவை நீக்கி 2024ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்புக்கமைய புதிய வேட்புமனுவைக் கோருவதற்கான திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நீதிமன்றத்தில் 4 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. நீதிமன்றத் தீர்ப்புக்கமையவே உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

நீதிமன்ற தீர்ப்பு கிடைத்த பின்னர் நாடாளுமன்றத்தில் இரண்டாம் மூன்றாம் வாசிப்புக்களின் பின்னர் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். சபாநாயகர் கையெழுத்திட்ட தன் பின்னர் குறித்த சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

அதன் பின்னரே தேர்தல் ஆணைக்குழுவால் அதற்குரிய தினத்தை தீர்மானிக்க முடியும். எவ்வாறிருப்பினும் ஏப்ரலுக்குள் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பு கிட்டும் என்று நம்புகின்றோம்.

பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 1064 வேட்பாளர்கள் தமது செலவு அறிக்கையை சமர்ப்பிக்க தவறியதால் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்களுக்கு தேவையான நிதி தொடர்பான மதிப்பீட்டை திறைசேரிக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம்.

அதற்கமைய வரவு - செலவு திட்டத்தில் அதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டு தேர்தலின்போது ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் - என்றார்.

## அரிசித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்தாவது:

துறைமுகத்தில் தேங்கியுள்ள கொள்கலன்கள் தொடர்பில் ஆளும்தரப்பு தெளிவான அறிக்கையை வெளியிடவேண்டும். 48 மணித்தியாலங்களில் அனைத்தையும் மாற்றுவதாகக் கூறியவர்கள் 4 மாதங்கள் கடந்தும் ஒன்றும் செய்யவில்லை. குறைந்த பட்சம் ரணில் ஆட்சியில் வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களையேனும் இவர்களால் நிறுத்த முடியவில்லை.

இவர்களுக்கு இதற்காகவா மக்கள் 159 ஆசனங்களை வழங்கினர்? மூன்றில் இரண்டுக்கும் அதிக பெரும்பான்மையை வைத்துக்கொண்டு நாட்டுக்குத் தேவையான எந்தவொரு சட்டத்தை இயற்றவும், நீக்கவும் முடியும் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

ரணில் ஆட்சி வழங்கிய மதுபானசாலை அனுமதி பத்திரங்கள் சட்ட ரீதியானவை என்பதால் அவற்றை நிறுத்த முடியாதென அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிடுகின்றார். அவ்வாறெனில் இன்னும் சிறிது காலம் செல்லும்போது மத்திய வங்கி பிணைமுறி மோசடியும் சட்ட ரீதியானது எனக் கூறி அதனையும் கைவிட்டுவிடுவார்கள்.

நாட்டு மக்களுக்கு அரிசியைக்கூட வழங்க முடியாமல் இறுதியில் வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகளைக் குறை கூறுகின்றனர்.

இலங்கை முழுவதும் சென்று உரையாற்றும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க, அரச தலைவரைப் போலன்றி முன்னாள் ஜே.வி.பி. தலைவராகவே பேசுகின்றார். அவர் ஒரு நாட்டின் ஜனாதிபதி என்பதை அவருக்கு நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தல் வெகு விரைவில் இடம்பெறும். நாம் அதற்கு தயாராகவே இருக்கின்றோம். அந்த தேர்தலில் மக்கள் அரசாங்கத்துக்கு சிறந்த பாடத்தைப் புகட்டுவார்கள் - என்றார்.

## கட்சியின் ....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்புக்கான தீர்வு விடயத்தல் நாடாளுமன்றத்தில் கூட்டாகச் செயற்படுவது தொடர்பான பேச்சில் பங்கேற்பதற்கு வருமாறு அந்த அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னணியின் அழைப்புக் கிடைத்த பின்னர் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிவஞானம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாது:

எமது கட்சிக்குப் புதிய அரசமைப்பு முயற்சிகள் புதியவை அல்ல. கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் எமது கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் சிவஞானம் சிறிதரனும் நாடாளுமன்றத்தில் சந்தித்து இது குறித்துப் பேசியிருந்தார்கள். அதுவிடயம் சம்பந்தமாக கட்சியின் மத்திய செயற்குழுவிலும் உரையாடப்பட்டிருந்தது. அவர்களது முன்முயற்சிக்கு எதிராக நாங்கள் தீர்மானங்களை எதனையும் எடுக்கவில்லை.

மாறாக, எமது கட்சியின் சார்பில் அத்தகைய விடயங்களை முன்னகர்த்துவதற்காக எழுவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இப்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எனக்கும், கட்சியின் பொதுச் செயலாளர் சத்தியலிங்கத்துக்கும் எழுத்து மூலமாக கடிதமொன்றை வழங்கியுள்ளார்கள். நாளை நான் (இன்று) சத்தியலிங்கம், சிறிதரன், சுமந்திரன் ஆகியோரைச் சந்திப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஆகவே அவர்களுடனும் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடனும் பேசிய பின்னரே எமது முடிவைத் தெரிவிப்போம்.

2016--2018வரையிலான காலப்பகுதியில் ரணில் விக்கிரமசிங்கவின் ஏற்பாட்டில் புதிய அரசமைப்புக்காகத் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை குறித்து நாம் பேசவேண்டிய தேவையில்லை. அது ஏற்கனவே கைவிடப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்சவின் புதிய அரசமைப்புக்கான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான நிபுணர்கள் குழுவிற்கு எமது கட்சி சமர்ப்பித்த அரசமைப்புக்கான வரைவு உள்ளது.

அந்த வரைவினையும் இணைத்து, கஜேந்திரகுமாரின் கருத்துக்களையும் இணைத்துக்கொண்டு நாம் சுமூகமானதொரு நிலைப்பாட்டுக்கு வரக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அந்தவகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அழைப்பினை சாதகமாக பரிசீலிப்பதற்கே எதிர்பார்க்கின்றோம் என்றார்

## ஊழல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் சுமார் 15 ஆண்டுகளின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் வழக்கு தாக்கல் மற்றும் விசாரணைகள் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பது தற்போது தெளிவாகிறது.

கடந்த ஆளும்தரப்புக்களில் அங்கத்துவம் வகித்தவர்களுடன் தொடர்புடைய ஊழல், மோசடிகள் குறித்த கோப்புக்கள் இத்தனை ஆண்டுகளாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. தற்போது அவை மீளத் திறக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாகவே தொடர்ச்சியாக சமூகத்தில் முக்கிய புள்ளிகள் எனக் கூறப்படுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இவை எமது தேவைக்காக முன்னெடுக்கப்படுபவை அல்ல. மஹிந்த ராஜபக்சவின் மகன் என்பதற்காக இதனை அரசியல் பழிவாங்கல் எனக் கூற முடியாது. பிணை கிடைத்தாலும் வழக்கு விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். அதற்கமைய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் விவகாரத்தில் பொலிஸார் முறையாகச் செயற்படவில்லை எனக் கூற முடியாது. ஆனால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் சில குறைபாடுகள் ஏற்படுகின்றன.

எவ்வாறிருப்பினும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டோரை பாதுகாப்பதற்கு எமது அரசாங்கம் ஒருபோதும் நடவடிக்கை எடுக்காது என்றார்.

## மகிந்தவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரைப் புதுக்கடை இலக்கம் 5 மேலதிக நீதிவான் பவித்ரா சஞ்சீவனி முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியபோது ஜனவரி 27 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பணமோசடி சட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகனான யோஷித ராஜபக்ச, நேற்றுக் காலை தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பெலியத்த நுழைவாயிலுக்கு அருகில் கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தை சேர்ந்த அதிகாரிகள் குழுவால் அவர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் கொழும்புக்கு அழைத்து வரப்பட்ட நிலையில் அவரிடத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தொடர்ந்து அவர் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இரத்மலானை, சிறிமல் பிரதேசத்தில் அமைந்துள்ள 34 மில்லியன் ரூபா மதிப்புள்ள வீடு மற்றும் காணியை வாங்கியது தொடர்பாக யோஷித ராஜபக்சவை சந்தேகநபராகப் பெயரிடப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக சட்டமா அதிபரால் ஜனவரி 23 குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. தற்போது தொடரப்பட்டுள்ள இந்த காணி வழக்கின் பிரதான சந்தேகநபர், யோஷித ராஜபக்சவின் பாட்டியான டெய்சி ஃபோரஸ்ட்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# சுண்டிக்குளம் - பேப்பாராப்பிட்டி வீதியின் மேசமான நிலை குறித்து எம்.பி. களஆய்வு

சுண்டிக்குளம் பேப்பாரப்பிட்டி பகுதியில் கடல் தொழிலில்ஈடுபடுவோர்சுண்டிகுளம்சந்திதொடக்கம் கடற்கரைபேப்பாராப்பிட்டி வரைசெல்லும்பிரதான வீதி 09 கிலோ மீற்றர் தூரம் அளவில் அளவில் முற்று முழுதாக பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும் இதன் காரணமாக இவ்வீதியை பயன்படுத்தும் ஐந்து கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் சுண்டிக்குளம் கடற்கரை பகுதியில் கடல் தொழிலில் ஈடுபடும் சுமார் 1500 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தமதுகடற்தொழிலை இழந்த நிலையில் நமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியாத நிலையில் தற்போது சட்டவிரோத தொழிலுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக நமது கடல் தொழில் முற்று முழுதாக பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் நேற்று (சனிக்கிழமை);உழவு இயந்திரத்தில் சுண்டிக்குளம் கல்லாறு மீனவ மக்கள் கடலில் பிடிக்கின்ற மீனை உரிய நேரத்தில் கொண்று சென்று விற்பனை செய்ய முடியாத நிலையில் இவ்வீதி காணப்படுவதாகவும் இதன் காரணமாக தாம் கடலில் பிடிக்கின்ற மீனைபாதி விலைக்குவியாபாரிகளுக்கு விற்பனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வீதி புலரமைக்கப்படுமாயின் நேரடியாகவே மக்கள் பலபகுதிகளில் உள்ளசந்தைகளுக்கு உரிய நேரத்தில் விற்பனை செய்யவும் சிறந்த வாழ்வாதாரத்தை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் வீதிக்கான பணத்தை மக்களின் பணமாக மக்களிடமிருந்து வரியாகஅறவிடப்பட்டபணங்கள் திரைசேரியில் உள்ளதாகவும் அதனைக் கொண்டு வீதியை புனரமைக்க முடியும் எனவும் அத்துடன் இவ்விதிபாரிய அளவில் சேதமடைந்து காணப்படுவதன் காரணமாக பொது போக்குவரத்தும் மட்டுப்படுத்துப்பட்ட அளவிலே இடம்பெறுவதாக தெரிவித்தனர்.

இதன்காரணமாக பாடசாலை மாணவர்கள் மற்றும் அவசர தேவை கருதி வைத்தியசாலை செல்வோர்மிக அதிகமாக பாதிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கூறுகையில் -

இவ்விதி இவ்வருட இறுதிக்குள்முழுமையாக புனரமைப்புபணிகள்நடைபெறும் எனவும் தற்பொழுது மீனவர் பயன்பாட்டுக்காக தற்காலிகமாக விரைவில்வீதியை பாதிக்கப்பட்ட பகுதிகளை ஓரளவு புனரமைப்பு செய்துதருவதாகவும் மீனவர்களுக்கு உறுதியளித்தார். 113





## 15 ஆண்டுகளுக்குப் பின்னர்

# வவுனியா கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம்



15 வருடமாக இராணுவத்தின் வசமுள்ள வவுனியா கூட்டுறவு பயிற்சி நிலையத்தை விடுவிக்க இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கிளீன் சிறிலங்கா விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வவுனியா மாவட்டத்தில் காணப்படும் கூட்டுறவு பயிற்சி நிலையமானது கடந்த 15 வருடமாக இராணுவத்தின் பயன்பாட்டில் காணப்பட்டு வந்தது. கடந்த மாதம் இராணுவத்துடன் பேச்சு நடத்தினோம். அவர்கள் விடுவிப்பதாக உறுதியளித்துள்ளார்கள்.

வடக்கு மாகண சபை ஆட்சியின் போது வவுனியாவில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் இதுவரை காலமும் திறக்கப்படாது பூட்டிய நிலையில் காணப்படுகின்றது. எதிர்வரும் காலத்தில் அதாவது வரும் மாதத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அதனை திறந்து மக்களது பயன்பாட்டிற்குவிடவுள்ளோம்.

வன்னிப் பிரதேசத்தில் மகாவலி கங்கை நீர் இதுவரை வழங்கப்படவில்லை. எமது ஆட்சியில் மகாவலி கங்கை நீர்வளமானது வன்னிக்கும் வழங்க திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் வளமான எதிர்காலத்தையும், வளமான வாழ்க்கையையும் வன்னி மக்களுக்கு பெற்றுக் கொடுப்போம் எனத் தெரிவித்தார். 100

# பனைசார் கைப்பணியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

(சுபேசன்)

பனை சார் கைப் பணியாளர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும்-பனை அபிவிருத்திச் சபை பணியாளர்கள் சந்திப்பு வைபவமும் சனிக்கிழமை பிற்பகல் கைதடியில் அமைந்துள்ள பிரதம செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது.

பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக பெருந்தோட்டப் பிரதி அமைச்சர் சுபிரதீப் கலந்து கொண்டு பனை அபிவிருத்திச் சபைப் பணியாளர்களுடைய குறை-நிறை தொடர்பாக கேட்டறிந்ததுடன், பனை சார் கைப் பணியாளர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்திருந்தார்.

இந் நிகழ்வில் பெருந்தோட்ட அமைச்சரின் பிரத்தியேக செயலாளர்,கடற்தொழில் அமைச்சரின் பிரதிநிதி, பனை அபிவிருத்திச் சபை அதிகாரிகள், முகாமையாளர்கள், பணியாளர்கள் மற்றும் பனை சார் கைப்பணியாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 2025ஆம் ஆண்டு தலைவர் தெரிவு

(ஹலால்தீன் )



கிண்ணியா உதைப்பந்தாட்ட செம்மேளத்தின் தலைவராக ஜிகாத் ஆஷிக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) நடைபெற்ற கிண்ணியா உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான தலைவர் போட்டியிலேயே இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கிண்ணியா மத்திய கல்லூரி அப்துல் மஜீத் மண்டபத்தில் நடைபெற்ற தலைவர்களுக்கான தெரிவிலேயே இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கிண்ணியா மத்திய கல்லூரின் விளையாட்டு பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றி வரும்,இவர் பல விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றுள்ளதுடன். மாணவர்களினதும் சமூகங்களினதும் பொதுப் பணியிலும் சமூக சேவையிலும் ஈடுபாடு உடையவர்.

# மீண்டும் அதிகரித்த அரிசி விலை

(பாறுக் ஷிஹான்)

அரிசிவகைகளுக்கான செயற்கைதட்டுப்பாட்டை வர்த்தகர்கள் சிலர் மேற்கொள்வதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை அம்பாறை அக்கரைப்பற்று மாநகர சபைகள் உள்ளிட்ட சம்மாந்துறை காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில், இறக்காமம், நாவிதன்வெளி, உகண, மகாஓயா, பதியத்தலாவ, தெகியத்தகண்டிய, தமண, நாமல்ஓயா, ஆலையடிவேம்பு, லகுகல பகுதிகளில் அரிசி வகைகளுக்கான தட்டுப்பாடுகள் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அரிசி வகைகளை நுகர்வோர் பெற்றுக்கொள்ள முயற்சி செய்த போதிலும் வர்த்தர்கள் சிலர் அதிக விலைக்கு விற்பனை செய்ய முயற்சிப்பதுடன் அதிக விலைக்கு தற்போது அரிசியை கொள்வனவு செய்ததாக கூறி அதிகளவான விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

மேலும்சிலவர்த்தகர்கள் அரிசிவகைகளைபதுக்கல் செய்வதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே இவ்விடயம் தொடர்பில் அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

மேலும்சில அரிசி ஆலைகள் வர்த்தக நிலையங்கள் அரிசி விடயத்தில் மாபியா இரகசியங்கள் பேணி வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தவிர, அரிசி விற்பனை செய்யும் போது நுகர்வோருக்கு நிபந்தனை விதிப்பது, மேலதிக கட்டணங்கள் அறவிடுவது, அரிசி வகைகளை பதுக்கி வைப்பது தொடர்பாக பொது மக்களினால் பல்வேறு முறைப்பாடுகள் உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இவ்வாறான அரிசி தட்டுப்பாடுகள் இடம்பெற்ற போது அம்பாறை மாவட்டத்தில் உள்ள நெல் களஞ்சியசாலை வர்த்தக நிலையங்கள் மற்றும் அரிசி களஞ்சியசாலைகளில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றத்தினுடாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரிசிதட்டுப்பாட்டிற்கு மத்தியில் சிலவர்த்தகர்கள் கையிருப்பில் உள்ள அரிசிவகைகளுக்கு கட்டுப்பாட்டு விலையை விடவும் அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாக மற்றுமொரு குற்றச்சாட்டும் நுகர்வோரால் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியின் விலையை அவ்வப்போது அதிகரிப்பதால் கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்க முடியாமல் தவிப்பதாக அரிசி மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அரிசியின் மொத்த விலையை மீண்டும் உயர்த்தியுள்ளதாக அரிசி ஆலை உரிமையாளர்கள் நாடளாவிய ரீதியில் உள்ள அரிசி மொத்த வியாபாரிகளுக்கு அறிவித்துள்ளதுடன் நாட்டு அரிசி சம்பா மற்றும் கீரி சம்பா ஆகிய அரிசிகளின் மொத்த விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அரிசி விற்பனை நிலையங்களில் நேற்று திடீர் சுற்றிவளைப்புக்கள்

### பதுக்கலை தடுக்க அம்பாறையில் நடவடிக்கை

(பாறுக் ஷிஹான்)

அரிசி களஞ்சியசாலை மற்றும் அரிசி விற்பனை நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்பு நேற்று அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்டது.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார தலைவரின் ஆலோசனையுடன் நிறைவேற்றுபணிப்பாளார் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார நவரத்ன மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளால் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் இவ் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது பெரிய நீலாவணை பொலிஸாரின் பிரசன்னத்துடன் புலன் விசாரணை அதிகாரிகளால் பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை பகுதியில் உள்ள அரிசி களஞ்சியசாலை மற்றும் அரிசி வர்த்தக நிலையங்கள் பரிசோதணை மேற்கொள்ளப்பட்டு எச்சரிக்கையுடன் அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டது.



மேலும் பல அரிசி களஞ்சியசாலை மற்றும் அரிசி வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றதினுடாக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.மேலும் அரிசி பதுக்கலில் ஈடுபட்டுள்ளவர்த்தகர்கள் தொடர்பில் அறியத்தருமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நேற்று மட்டும் சுமார் 20 இற்கும் மேற்பட்ட அரிசி விற்பனை நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் விலைப்பட்டியல் காட்சிப்படுத்த தவறிய வர்த்தகர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.



# சுகாதார விடயங்கள் சம்பந்தமாக சம்மாந்துறையில் கலந்துரையாடல்

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை சுகாதார விடயங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையில் நேற்று (சனிக்கிழமை) சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், சம்மாந்துறை சுகாதார விடயங்கள் சம்பந்தமான கலந்துரையாடலுக்கு வளவாளராக டாக்டர் எம்.ஐ.எம்.ஹில்மி (சமூக வைத்திய நிபுணர்) கலந்து கொண்டு பல்வேறு தொற்றுநோய், தொற்றா நோய் போன்ற பல நோய்கள் பற்றி விரிவாக விளக்கப்பட்டது.

இதன் போது, சம்மாந்துறை வர்த்தக சம்மேளனத்தின் உறுப்பினர்கள், சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்ஷூறா உறுப்பினர்கள், சம்மாந்துறை ஜம்மியத்துல் உலமா சபை உறுப்பினர்கள் என பலராலும் பல விடயங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்ட போது அதற்கான பதில்களும் வழங்கப்பட்டன. அத்துடன் சில சட்ட நடவடிக்கைகளும் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு, முன்னாள் அமைச்சின் செயலாளரும் சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்ஷூறா அமீர் எம்.ஐ. அமீர் மற்றும் உறுப்பினர்கள், சம்மாந்துறை ஜம்மியத்துல் உலமாசபைதலைவர் மௌலவி எம்.எல்.எச். பசீர் மதனி மற்றும் உறுப்பினர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.என்.எம். பைலான், பொதுச் சுகாதார பரிசோதகர்களான எம்.ஐ.எம். ஹனீபா, எம்.டி. நசார், டி. தினேஸ், ஏ.எம். றம்சீன், டி. பரமேஸ்வரன், ஏ.எம்.எஸ்.டி. அத்தநாயக்க, சம்மாந்துறை வர்த்தக சம்மேளன உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



இக்கலந்துரையாடலுக்கு லயன்ஸ் கழகம் அனுசரணை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்புத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்த 24 கப்பல்கள் திரும்பிச் சென்றுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் சீவலி அருங்கொட தெரிவித்தார்.

அவர் சுங்கத் திணைக்கள கேட்போர் கூடத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: வெள்ளிக்கிழமை காலை 10 மணிவரை 2,724 கொள்கலன்கள் பரிசோதனைக்காக துறைமுகத்தில் இருந்தன. கொள்கலன்களைவிடுவிப்பதிதல் நெரிசல் காணப்படு கின்றமை இந்த எண்ணிக்கையிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. எவ்வாறிருப்பினும் இவற்றை துரிதமாக விடுவிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய உத்தியோகத்தர்கள் மேலதிக நேர கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஏனைய நிறுவனங்களுடனும் இணைந்து வெகுவிரைவில் இவற்றை விடுவிப்பதற்கு முயற்சிக்கின்றோம். அதேவேளை குறுகிய காலத்திட்டமாக கடந்த வாரம் ஆளும்தரப்பால் முன்மொழியப்பட்ட இரு இடங்களைப் பெற்றுக்கொண்டு அவற்றை அபிவிருத்தி செய்து, கொள்கலன்களை அங்குவைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் கொள்கலன்களுடன் துறைமுகத்தை வந்தடையும் கப்பல்கள் தொடர்பில் சுங்கத்திணைக்களத்தால் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் படுவதில்லை. கப்பல்கள் துறைமுகத்தை வந்தடைந்த பின்னர் அவற்றிலிருந்து கொள்கலன்களை தரையிறக்குவதற்கான அனுமதியை வழங்கும் நடவடிக்கை சுங்கப்பிரிவால் முன்னெடுக்கப்படும். எனவே கொள்கலன் நெறிசலால் கப்பல்கள் திருப்பியனுப்பப்பட்டதாகக் குறிப்பிடுவது குறித்து எமக்கு எதுவும் தெரியாது.

எவ்வாறிருப்பினும் கப்பல் முகவர்களின் சங்கம், விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்குஅனுப்பிவைத்துள்ளகடிதமொன்றின் பிரதி சுங்கத்திணைக்களத்துக்கும் கிடைக்கப் பெற்றுள்ளது. அந்தக் கடிதத்தில் 24 கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திலிருந்து திரும்பிச் சென்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் தொடர்பில் எவ்வித தகவலும் விவரங்களும் எம்மிடம் இல்லை என்றார்.

# நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் மருதமுனையில் அதிரடி

(ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் தற்போது அரிசி தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, வியாழக்கிழமை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கும் நுகர்வோர் அதிகார சபை உத்தியோகத்தர்கள் பொலிஸ் அதிகாரிகளுடன் திடீர் கண்காணிப்பு பரிசோதனையில் ஈடுபட்டனர்.

மருதமுனை பிரதேசத்திற்கு வருகை தந்த நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள் அரிசி விற்பனை நிலையங்கள் மற்றும் அவர்களுடைய வீடுகளுக்கு சென்று கண்காணிப்பு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பொதுமக்களின் பாவனைக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை பதுக்கி வைத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். அரிசியை யாரும் பதுக்கி வைத்திருக்கிறார்களா? அல்லது அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்களா? என்பதை கண்காணிப்பதே இந்த திடீர் பரிசோதனையின் நோக்கம் என உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இதன்போது, நாட்டு அரிசி - 230.00 ரூபாவுக்கும் பச்சை அரிசி- 220.00, கீரி சம்பா அரிசி 260 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும். அத்தியாவசிய பொருள்களைப் பதுக்கி வைத்தல் அல்லது மறைத்து வைத்தல் கண்டுபிடிக்கப்பட்டார். கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எனவும் வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.01.2025இல் வெளியிடப்பெற்றது